# அனைத்துலகத் தமிழ்க்கலைத் தேர்வு - 2026
# தேர்வு விதிமுறை

**தேர்விற்கு தோற்றக்கூடிய பாடங்கள்:**
நடனம்(பரதம்), இசை(வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல், சுரத்தட்டு, மெண்டலின்), மிருதங்கம்.

**பாடத்திட்டம்:**
**புதிய பாடத்திட்டம் - 2019**

**தேர்வுக் காலம்:**
**அறிமுறை: 2026 ஒக்டோபர் மாதம் 11 ம் திகதி நடைபெறும்.** முற்பகல்: நடனம், மிருதங்கம்
பிற்பகல்: இசை(வாய்ப்பாட்டு, வீணை, வயலின்)
**செய்முறை: 2026 ஒக்டோபர் மாதம் 17ம் திகதியில் இருந்து நவம்பர் மாதம் 01ம் திகதிவரை** நடைபெறும். (இரு வாரங்களுக்கு முன்னர் அனுமதி அட்டை அனுப்பிவைக்கப்படும்.)

**விண்ணப்பம்:**
அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகத்தில் அங்கத்துவச் சந்தா செலுத்தி தங்களை அங்கத்தவர்களாக இணைத்துக்கொண்டுள்ள நிறுவனங்கள் - ஆசிரியர்களது மாணவர்களும், ஜேர்மனி - தமிழாலயம், பிரான்ஸ் - தமிழ்ச்சோலை, நோர்வே - அன்னைபூபதி தமிழ்க்கலைக் கூடம், டென்மார்க் - மாலதி கலைக்கூடம், இத்தாலி - திலீபன் கல்வி நிலையம் போன்ற நிறுவனங்களில் கல்விகற்கும் மாணவர்கள் தங்கள் நிறுவனங்கள் மூலம் விண்ணப்பிக்கலாம். ஏனைய ஆசிரியர்கள் தங்களை அங்கத்தவர்களாக இணைத்துக்கொள்வதன் மூலம் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட தங்கள் நாடுகளிலுள்ள நிறுவனங்கள் மூலம் தேர்வுக்கட்டணத்துடன் **€ 25.-** மேலதிகமாகச்செலுத்தி விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம்.
சரியானமுறையில் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்களும் தனித்து அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தனித்தனியான விண்ணப்பப்படிவத்தினை முழுமைப்படுத்துதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 21.06.2026**

**விண்ணப்பிக்கக்கூடிய தரம்:**
தரம் ஒன்று முதல் ஆற்றுகைத் தரம்வரை நடைபெறும் இத்தேர்விற்கு புதிதாகத் தோற்றும் மாணவர்கள் தரம் ஒன்று தேர்விற்கே தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். வயதுகூடிய, அதிக பயிற்சியுள்ள, மாணவர்கள் புதிதாக தேர்விற்குத் தோற்றுவதாயின் அவர்கள் விரும்பும் பட்சத்தில் தரம் மூன்றிற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

நடனத்துறை மாணவர்களிற்கு **ஆரம்பப்பிரிவு தேர்வு, நட்டுவாங்கத் தேர்வு** என்பன புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்பப்பிரிவிற்குத் தோற்றும் மாணவர்கள் **31.12.2021 இற்கு முன் பிறந்தவர்களாக** இருத்தல் வேண்டும்.
**நட்டுவாங்கத் தேர்விற்குத் தோற்றும்** மாணவர்கள் **ஆற்றுகைத்தேர்வினை** நிறைவு செய்திருக்கவேண்டும்.

**அறிமுறை அல்லது செய்முறைத் தேர்விற்கான மீள்தேர்வு:**
**2025 ஆம் ஆண்டில் நடைபெற்றுமுடிந்த தேர்வில் தரம் இரண்டு தொடக்கம், ஆற்றுகைத் தரங்களில் அறிமுறை, செய்முறைத் தேர்வுகளிற்குத் தோற்றி செய்முறை அல்லது அறிமுறைத் தேர்வில் ஏதாவது ஒரு பாடத்தில் சித்தியடையாத மாணவர்கள் விரும்பின் சித்திடையாத பாடத்திற்கு மட்டும் தோற்ற அனுமதிக்கப்படுவர். இவர்கள் தேர்வுக் கட்டணத்தினை முழுமையாகச் செலுத்துதல் வேண்டும்.**

தரம் இரண்டிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் **31.12.2017** இற்கு முன்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். தரம் 5, ஆற்றுகைத் தரத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் வயதினையும் கருத்திற்கொள்க. மாணவர்கள் முழுமையான கற்றலின்பின் அடுத்த தரத்திற்கு விண்ணப்பிப்பதே சிறப்பாகும். தேர்வில் தோற்றி தேர்ச்சியடைந்த மாணவர்கள் அடுத்த தரத்திற்கு தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். தேர்வில்தோற்றி தேர்ச்சியடையாத மாணவர்கள் அத்தரத்திற்கே மீளத் தோற்றுதல் வேண்டும்.

இசைத் துறையில் - வாய்ப்பாட்டு, வீணை, வயலின், புல்லாங்குழல் போன்ற பாடங்களில் ஒன்றினை பிரதான பாடமாக தேர்விற்குத் தெரிவுசெய்யும் மாணவர் உபபாடமாக மேற்குறிப்பிடப்பட்ட பாடங்களிற்கு தரம் இரண்டிற்குமேல் விண்ணப்பிப்பின் அம் மாணவர் அறிமுறைத் தேர்விற்குத் தோற்ற வேண்டியதில்லை. இவ்வாறு தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பிரதான பாடத்தில் சித்தியடையும் பட்சத்திலேயே உபபாடத்திற்கான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தேர்வுக் கட்டணம், தேர்வு நேரம்:**

| தரம் | வயது | தேர்வுக் கட்டணம் | தேர்வு நேரம் | |
|---|---|---|---|---|
| | | | அறிமுறை | செய்முறை |
| ஆரம்பப்பிரிவு | 31.12.2021 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 65 .-** | --- | 20 நிமிடம் |
| ஒன்று | | **€ 65 .-** | --- | 20 நிமிடம் |
| இரண்டு | 31.12.2017 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 80 .-** | 120 நிமிடம் | 25 நிமிடம் |
| மூன்று | | **€ 95 .-** | 180 நிமிடம் | 30 நிமிடம் |
| நான்கு | | **€ 110 .-** | 180 நிமிடம் | 40 நிமிடம் |
| ஐந்து | 31.12.2013 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 125 .-** | 180 நிமிடம் | 50 நிமிடம் |
| ஆறு | | **€ 140 .-** | 210 நிமிடம் | 60 நிமிடம் |
| ஆற்றுகைத் தரம் | 31.12.2009 இற்குமுன் பிறந்தவர்கள் | **€ 220.-** | 210 நிமிடம் | 90 நிமிடம் |
| நட்டுவாங்கத் தேர்வு | | **€ 160.-** | 210 நிமிடம் | 90 நிமிடம் |

**ஆய்வுக்கட்டுரைக்கான தலைப்பு: (ஆற்றுகைத் தரம்)**

ஆற்றுகைத் தரத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் தாங்கள் கற்கும் கலைத்துறை தொடர்பான ஒரு விடயத்தினை தெரிவுசெய்து சரியான முறையில் எழுதி ஆய்வுக்கட்டுரையினை செய்முறைத் தேர்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும். (குறைந்தது 30 பக்கங்கள்)

**பிந்திய விண்ணப்பம்:**

**21.06.2026** இற்கு முன்னர் விண்ணப்பப் படிவமும், தேர்வுக் கட்டணமும் நாடுகள்நிலைப் பிரதிநிதிகளுக்குக் கிடைக்கப்பெறாதவிடத்து அவ்விண்ணப்பங்கள் அனைத்தும் பிந்திய விண்ணப்பமாகவே கருதப்படும். இவ்வாறான விண்ணப்பம் ஒவ்வொன்றிற்கும் தேர்வுக் கட்டணத்துடன் **€ 30.-** மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும்.

**தேர்வு முறை:**

ஆரம்பத் தேர்வு, தரம் ஒன்று தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வின்போது மாணவர்களிடம் வாய்மொழித் தேர்வும் நடைபெறும்.

ஏனைய தரங்களிற்கு அறிமுறை, செய்முறை எனத் தேர்வுகள் நடைபெறும். செய்முறைத் தேர்வின்போது வாய்மொழித் தேர்வும் நடைபெறும். மாணவர்கள் தாங்கள் விண்ணப்பிக்கும் தரத்திற்கு கீழுள்ள தரங்களிலும் தேர்ச்சிக்கப்படுவார்கள்.

அறிமுறைத் தேர்விற்கு தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியிலேயே தோற்றுதல் வேண்டும். தாய்மொழி தெரியாதோரும், தமிழரல்லாதோரும் ஆங்கிலம், ஜேர்மன், பிறெஞ்ச் ஆகிய மொழிகளில் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

இசைத்துறையில் தேர்விற்குத் தோற்றும் மாணவர்கள் செய்முறைத்தேர்வின்போது தாங்களே சுருதிப் பெட்டியினை இயக்குதல் வேண்டும். அல்லது இலத்திரனியல் சுருதிப்பெட்டியினை உபயோகித்தல் வேண்டும்.

ஆற்றுகைத் தரத்திற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்திலும் முழுமையாகத் தேர்ச்சிக்கப்படுவதுடன் 60 முதல் 75 நிமிட ஆற்றுகை ஒன்றினையும் வழங்குதல் வேண்டும். இம் மாணவர்கள் செய்முறைத் தேர்வு, அறிமுறைத் தேர்வு போன்றவற்றில் தேர்ச்சியடையும் பட்சத்தில் இவர்களுக்கான ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு அடுத்த வருடம் இடம்பெறும். அத்துடன் இம் மாணவர்கள் துணைப்பாடத்தில் (நடனம் - வாய்ப்பாட்டு / மிருதங்கம், வாத்தியம் - வாய்ப்பாட்டு, வாய்ப்பாட்டு – வாத்தியம் / நடனம்) தரம் மூன்று தேர்ச்சியடையும் பட்சத்திலேயே அவர்களுக்கான பட்டயச்சான்றிதழ் (இசைக்கலைமணி, பரதக்கலைமணி) வழங்கப்படும்.

**செய்முறைத்தேர்வு, ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்வு ஆகியனவற்றிற்கு தெரிவுசெய்யும் உருப்படிகள் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களிற்கு அமைவாக இருத்தல் வேண்டும். திரைப்படத்திற்கு என எழுதப்பட்ட திரை இசைப் பாடல்களை தேர்வுகளின் போது (செய்முறை, ஆற்றுகைத்தேர்வு) பயன்படுத்த முடியாது. ஆற்றுகை வெளிப்பாட்டுத் தேர்விற்கு தெரிவு செய்ய இருக்கும் உருப்படிகள் தொடர்பாக ஏதேனும் தெளிவின்மைகள் இருப்பின் நாடுகள் நிலைப் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொள்ளவும்.**

ஆற்றுகை வெளிப்பாட்டுத்தேர்விற்குத் தோற்றும் மாணவர்கள் வீடியோ, புகைப்படக்கட்டணமாக **300.00 யூரோவினை** ஆற்றுகை வெளிப்பாட்டுத்தேர்வின் போது வழங்குதல் வேண்டும்.

**அனைத்துலகத் தமிழ்க்கலை நிறுவகம்**
**சூரிச், ஏப்ரல் - 2026**